# திறவுகோல்

2052 மாசி
மாத இதழ்



வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு சேல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# வளையல்காரன்

அந்த டி.வி.எஸ் 50 சத்தம்
முதலில் கேட்கும்
பின்பு "வளேயலு வளேயலு" என்று
வளையல்காரரின் வெண்கல குரல்
கணீரென்று ஒலிக்கும்
அடுத்த பத்து நிமிடத்தில் மொத்த ஊரும்
மஞ்சு அக்கா வீட்டு தாழ்வாரத்தில்
ஒன்று கூடும்...

பேச்சி பாட்டிக்கு கனமான
கண்ணாடி வளவி கூடவே
அவ போனதரம் சொல்லி அனுப்பிய
பட்டணப்பொடி
ஏகத்துக்கும் வெட்கப்படற
வயசு புள்ளைகளுக்கு
வலி தெரியாம அவுங்க கைக்கு
மாட்டி விடற பூப்போட்ட வளையல்கள்
கூடவே நதியா பொட்டு
பொறந்த குழந்தைக்கு
திருஷ்டி போக கறுப்பு வளையல்
வயித்தால போகாம இருக்க வசம்பு
மாசத்துக்கு ஒரு தரம் வந்து
எட்டுப்பட்டி கிராமத்துக்கும்
உறவா இருந்த
வளையல்காரர்களின் மனதை போல
ஜொலிக்கவில்லை...

நவீனமாய் வந்த எந்த ஃபேன்ஸி
கடையும்.....

பிரபுசங்கர். க
9894123778



நிரஞ்சனா கபிலன்,
375 தெற்குதெரு,
மாங்கொட்டை நத்தம்,
வல்லூர்,
மன்னார்குடி 614017.

# வழக்கமான பெண் பார்க்கும் படலம் என்று ஒரு அசட்டை...

முதல் ஆச்சரியம்
உன் விருப்பம்
என்னுடன் தனியே பேசுதல்.....

ஒரு வேலைக்கான நேர்காணல்
முஸ்தீபுகளுடன் ஏற்பாடுகள்......

பெரிதாய் பெண் வார்த்தைக்கு
மதிப்பில்லாத காலத்தில்
உன் மனம் உரைத்து
என் விருப்பம் அறிய விழைகிறாய்.....

ஆச்சரியத்தில் விரிந்த
விழிக்கடலில் நுழைந்து
என் மனச்சிப்பிக்குள்
இருக்கும் முத்தை
அறிய முயல்கிறாய்........

மண்டியிடவில்லை
ரோஜாப்பூ நீட்டவில்லை
ஒரு கூடை ரோஜாக்களை
தலையில் கொட்டிய
உணர்வைத் தந்த
காதல் விண்ணப்பம்....

புரிந்த மனதின் பூரிப்பில்
பூத்து விடுகிறது
நீ தேடிய ஒற்றை வார்த்தை.....

மதிக்கத் தெரிந்த மனதின்
மதிப்பு புரிந்தே
பதியமிடுகிறது  மனமும்
உன் காதலை....

— ஜோதி சரண்
8344456664



இரா. மதுவர்ஷினி
சரஸ்வதி வித்யாலயா பள்ளி
பெருவிடைமருதூர்

# திண்ணை

இடித்தொழிக்கப்பட்ட
ஒவ்வொரு வீட்டு திண்ணையும்
வாழ்ந்து முடிந்தவர்களின்
ஒவ்வொரு கதை பேசும்
ஒவ்வொரு கவிதை பாடும்
ஒவ்வொரு வாழ்க்கை பேசும் !

எதிர் வீட்டுப்பெண்களுக்கு
பேன் பார்ப்பதில் ஆரம்பித்து
பெண் பார்ப்பதிலாகட்டும்!

பக்கத்து வீட்டுப் பஞ்சாயத்தாகட்டும்
மாமியார்களின் ஏச்சாகட்டும்
அடுத்த வீட்டுக்காரரின்
சின்னவீடாகட்டும்!

புதிதாக அறிமுகமான
வளையல் ஜிமிக்கியாகட்டும்
விற்க வந்தவனிடம் வாங்கிய
ஜவுளியாகட்டும்!

வயசுக்கு வந்ததாகட்டும்
குடிசை கட்டி குந்தியதாகட்டும்
மாசாமாசம் வரும் தீட்டாகட்டும்!

விளையாடிக்களித்த
தாயம் விளையாட்டாகட்டும்
குழந்தைகள் தொட்டில் கட்டி
ஊஞ்சலாடியதாகட்டும்!

விருந்தினர்களின்
படுக்கையறையானதாகட்டும்
அடுக்கி வைத்திருந்த
நெல் அரிசி மூட்டைகளாகட்டும்!

புருஷன் பொண்டாட்டி
சண்டைகளாகட்டும்
சாகக்கிடந்த தாத்தா
பாட்டிகளாகட்டும்!

எம்.ஜி.ஆர் சிவாஜி படம் பற்றிய
நடிப்பு விவாதமாகட்டும்
பெரிசுகளின் குறைதீர்க்கும்
கூட்டமாகட்டும் என
எல்லா சரித்திர சங்கதிகளும்
சம்பிரதாயங்களும் நடந்து
முடிந்ததெல்லாமே
இந்த திண்ணைகளில் தான்!

திண்ணை என்பது வரலாறு
திண்ணை என்பது வாழ்க்கைப்பதிவு
திண்ணை குடும்பத்தில் ஓர் அங்கம்
திண்ணை குடும்ப அட்டையிலும்
வேறு எங்கும் பதிவு பெறாத சங்கம்!



— மகிழை. சிவகார்த்தி
கைப்பேசி: +91 8147480966

# பெற்றோர் மீது பிள்ளைகளின் காதல்!!!



வி.அட்சய ஜோதி,
(Atchayavijayan)
தஞ்சாவூர்.

காற்று செல்லாத
கருவறையிலும் காதல் செய்து
என்னை காவல் செய்தாய் ...

வெளி உலகை நான் காணும் போது
ஒளியாய் எனக்கு வெளிச்சம் தந்தாய் ...

நான் உறங்கும் நேரம் உறங்காமல்
உலகமாய் என்னை சுற்றி வந்தாய் ...

என் பாதம் தரையில் படுகையிலே
என்னை பம்பரமாய் சுற்றி திரிந்தாய் ...

என் கை பிடித்தது கண்ணத்தோடு
உன் முகம் பதித்தாய் ...

உன் முத்தம் மழை மொத்தமாய்
எனக்கே தந்தாய் ...

தோல் கொடுக்கும் தோரனையிலே
தோழனாய் நீ தெரிந்தாய் ... !

துவளும் நேரத்திலே தோழியாய் நீ தெரிந்தாய் ... !

கண் இமை போல
நீங்கள் என்னை காவல் செய்ய

ஆயுள் தோறும் உங்களுக்கு
துணையாய் நான் இருப்பேன்....

# சிந்தனையே வெற்றி

உறங்கிய நேரங்களும்...
தவறிய வாய்ப்புகளும்....
உயிர்பெறும் உன் சிந்தனையால் ....!?

இரவை மரித்து பகலை படைக்கும்
கதிரவனின் ஆற்றல் போல்...
நித்தம் நிழலாய் உன்னில் உதிக்கும்
சிந்தனைகளை நிஜமாய் உருவாக்கு!!

கடந்த கால பயணங்கள்
தேவையில்லை ....
உள்ளம் உருக்கும் மாயைகள்
வேண்டவே வேண்டாம் ..!!
வழியெல்லாம் தேடி அலையும்
உளறல்கள் வேண்டாம் .....!
உன் சிந்தனையில் வழியைத் தேடு !
நியாயம் கேட்டு கோபப்படு ....!
ஆனால்...
அதற்கு முன் நிறைய சிந்தனை
செய்...!?

ஒருபோதும் தளர்ந்து விடாதே...!
இன்னொரு வாய்ப்பு எப்போதும்
இருக்கும் என்று நம்பு..!?

உள்ளமும் சிந்தனையும்
தெளிவானால்..!
உன்னை வீழ்த்த எவரினும் முடியாது....
என்பதை நினைவில் நிறுத்து ..!?

உன் மனசாட்சிக்கு நீயே சாட்சி...!?
மற்றவர்களிடம் அதை நிருபிக்க
ஒருபோதும் வேண்டியதில்லை..!

வாழ்க்கையை வெறுப்பதற்கு
ஆயிரம் காரணம் இருப்பினும்....!
வழக்கை வாழ ஒரே காரணம்...
அது -
இந்த நிலை மாறிவிடும்....!?



— முனைவர்.சா.சம்பத்
தேசிய பயிற்சியாளர்
மன்னார்குடி

## உன் மீதான காதல்

பாவமா?
பரிகாரமா?
எனக்கு விளங்குவதில்லை.

என் ஆயுளை
சிறிது சிறிதாய்
கரைப்பது
காலம் அல்ல
உன் காதல்.

என் கவிதை உண்டியலை
உடைத்துப் பார்த்தால்
படிமங்களாய்ச் சிதறுவது
உன் பெயர் மட்டுமே.

உன்னைக் காதலிப்பது
பிழை என்கிறார்கள்
நீயும் அதே பிழையை
செய்துவிடு.
நான் பிழையற்றவள்
ஆகி விடுவேன்.

வறண்டு போன
என் காதல் பூக்களுக்கு
கொஞ்சம்
கண்ணீர் தெளி.

என்னிடம்
கண் கட்டி வித்தை
காட்டுகிறாய்
நான் ஏற்கெனவே
வென்று விட்டேன்
என் கண்ணுக்குள்
நீ.

உன் நினைவுகள்
எரிதழலில் இட்டு
எரிக்கிறது
வைரமாய் மின்னுகிறது
காதல்.

வெற்றிடத்தில்
ஒலி புகாது
ஆனால்
உன் பெயரின் இசை
பயணிக்கும்.

உன்னை மறக்க
எழுதுகிறேன்
எழுத்திலும்
காலூன்றி நிற்கிறாய்.

நீ கிடைக்க
ஆத்திகம் போற்றுகிறேன்
தோல்வியின் விரக்தியில்
நாத்திகம் பற்றுகிறேன்.

எனக்குள் எரியும்
இரு தலைக் கொள்ளியில்
அகப்பட்டுத் துடிக்கிறது
தெய்வம்.

இதயத்துள் முத்தமிடு.
முக்தி பெறட்டும்
என் ஆன்மா.

------------------

## ஊரெங்கும்

பொறியியல் கல்லூரிகள்
வேலை தேடும் பொறியாளர்கள்.

ஊரெங்கும்
மருத்துவக் கல்லூரிகள்
வியாதியைத் தேடும் மருத்துவர்கள்

ஊரெங்கும்
கார்ப்பரேட் கடைகள்
தூண்டில் போடும்
இலவசங்கள்

ஊரெங்கும் மதுக்கடைகள்
கஜானாவைக் காப்பாற்றும்
குடிமகன்கள்

ஊரெங்கும் ஆலயங்கள்
பக்தனை நம்பி வாழும்
கடவுள்கள்

ஊரெங்கும் கட்சிகள்
வழிகாட்டத் துடிக்கும்
தலைவர்கள்

ஊரெங்கும் தொண்டர்கள்
விரலில் மை இட்டு ஏமாறும்
ஏமாளிகள்

------------------

## ஈவு இரக்கமின்றி

மூங்கில்களை
எத்தனை முறை
வெட்டிப் போட்டாலும்
துளிர்த்துக்கொண்டே இருக்கிறது.

மதில் தாண்டிச் சென்று
அடுத்த வீட்டினருக்கும்
எங்களுக்கும்
சண்டை மூட்டி விடுகிறது.

அக்கம் பக்கத்து மண்ணில்
வேரூன்றி இருந்தாலும்
கிளை முடக்கி வைத்துக்கொள்ளத்
தெரிவதில்லை.

என்றோ நட்டு விட்டுப் போன
கொள்ளுப் பாட்டியின் புத்தி
அப்படியே இருக்கிறது
எல்லை தெரியாமல் நிழல் பரப்பும்
என் வீட்டு முருங்கை மரத்திற்கு.

------------------

## அப்பா

அரைகுறையாக உபயோகித்துத்
தூக்கி எறிந்திருந்த டைரி
அது.

அவர் எழுதாத பக்கங்களை
சொந்தமாக்கிக் கொண்டிருக்கிறாள்
அம்மா.

வாயில் நுழையாத
உணவு பெயர்களின் செய்முறைகளை
கட்டுரையாக்கி இருக்கிறாள்.

நேர்ப்புள்ளி சந்துப்புள்ளி
என்று எழுதி
சிக்கலான கோலங்களும்
புள்ளியில்லாத ரங்கோலிகளும்
ஓவியமாகி வழிகின்றன.

இஸ்திரி அட்டவணைக்குள்
அப்பாவின் வேட்டி சட்டைகளையும்
என் சுடிதார் துணிகளையும்
அடுக்கி வைத்திருக்கிறாள்.

பால் கணக்கும் மளிகை பாக்கியும்
தெள்ளத்தெளிவான கையெழுத்தில்
மிளிர்கின்றன.

பக்கத்து வீட்டு சந்திராவோடு
கொடுத்தல் வாங்கல் தொகையும்
அதில் அடங்கும்.

விரல் ஒடிய எழுதி முடித்த
'ஓம் முருகா' வாசகம்
விடாது ஒலிக்கிறது
சில தாள்களில்.

ஒன்றே ஒன்று மட்டும்
எவ்வளவு யோசித்தும்
ஏன் என்று விளங்கவே இல்லை
கடைசி வரை.

நடுநடுவே
ஒரு குழந்தையைப் போல்
வட்ட வட்டமாக
மிக அழுத்தமாக
காகிதம் கிழியும் அளவிற்குக்
கிறுக்கி வைத்திருக்கிறாள்
அம்மா.

------------------

## கனவுக்காட்சியைப் பாதியில்

அணைத்துவிட்டு
சட்டென விழிக்கச் செய்கிறது
அலைபேசி அலாரம்.

இன்றைய வேலைகளுக்கான
ஒத்திகையை ஒளிபரப்புகிறது
மூளை நரம்பு.

யார் முகத்தையும் ஏறிட்டுப்
பார்க்க விடாமல் செய்கிறது
பரபரப்பு.

உறவுகளுக்காக
பணத்தின் பின்னால் ஓடுகிறேன்.
பணத்திற்காக
காலத்தின் பின்னால் ஓடுகிறேன்.

அங்கும் இங்கும் என்னை
தரதரவென இழுத்துப் போகும்
வாழ்க்கையை ரசிக்க
என்றுமே தட்டிக்கழிப்பதில்லை
நான்.

------------------

## முத்த வகுப்பு நடத்துகிறாய்

தினந்தோறும் எனக்கு.

தமிழிலும் ஆங்கிலத்திலும்
முத்தமொழிகளை
மொழிபெயர்க்கச் சொல்கிறாய்...
அத்தனையும் எழுத்துப்பிழைகளாய்
சிதறுகின்றன.

கணிதத்தில்
கூட்டலையும் கழித்தலையும்
கன்னம் தொட்டுப் பயில்கிறேன்...
உன் ' வாய்ப்பாட்டு' முத்தங்களில்
பெருக்கலும் வகுத்தலும்
திக்குமுக்காடிப் போகின்றன

அறிவியல் பாடத்தில்
வேதியியல் மாற்றம் நடத்துகிறாய்...
என் ஹார்மோன் நதி
ஆழிப்பேரலையாய்ப் பொங்குகிறது.

வரலாற்றுப் பகுதியில்
முத்தம் தோன்றிய கதையைக்
கற்பிக்கிறாய்...

இருவரும்
ஆதாம் ஏவாள் பிறவியை
எடுத்து விடுகிறோம்.

புவியியல் புரிய வைக்கிறாய்...
உன் முத்தத்தின் மின்காந்த அலையில்
மீள முடியாமல்
சிக்கிக் கொள்கிறேன்.

அத்தனை பாடத்திலும்
வேண்டுமென்றே தோற்கிறேன் நான்.
அதைத் தெரிந்தும்
தெரியாதது போல்
தொடர்ந்து கற்றுத்தருகிறாய் நீ.

சிதறிவிழும் முத்தங்களை
எண்ண முடியாமல் வெற்றியடைகிறது
நம் பள்ளியறைக் காதல்.

------------------

## என்னை நானே சிறைப்பிடித்து

வைத்து
ரசித்துக் கொண்டிருக்கிறேன்.

மரணத்தின் விளிம்பிற்கு
வலியச்சென்று
அகாலத்திற்கு தாழ்ப்பாள் போட்டு
வந்திருக்கிறேன்...

இரவில் சிறகு விரிக்கும்
விட்டில் பூச்சிகளின்
ஒளிப்பேழைகளுக்குள்
விடியலை துளிர்க்கச் செய்கிறேன்...

ஆழியலை ஒன்றன் மீதமர்ந்து
ஆழ்கடலின் சிறுதுளியை
என் உயிர் இலைகளில் சொட்ட
விடுகிறேன்...

'ஏன் இப்படியெல்லாம் செய்கிறாய்?'
என கேட்பவர்களுக்கு
எப்படி விளங்க வைப்பது
நான் காதலிக்கிறேன் என்பதை.

— தி. கலையரசி.

# நிதமும் காதலர் தினமே!

கடற்கரைகும் நீரலைக்குமிடையே காதல்..

மரவேருக்கும் நிலத்தடிநீருக்குமிடையே காதல்..

மரகதம் கொண்ட மலருக்கும் மழைத்தேனிக்குமிடையே காதல்..

வான்பொழியும் மழைக்கும் மண்வாசனைக்குமிடையே காதல்..

சூழ்ந்திருக்கும் இருளுக்கும் சுடர்ஒளிக்குமிடையே காதல்..

வான்முழங்கும் இடிக்கும் மிளிரும் மின்னலுக்குமிடையே காதல்..

நாவிற்கும் ருசிக்குமிடையே தீராக் காதல்..

கண்களுக்கும் காட்சிகளுக்குமிடையே காதல்..
உடலுக்கும் உயிருக்குமிடையே காதல்..

எனக்கும் என்னவனுக்குமிடையே எல்லையில்லாக் காதல்..

இவ்வாறு காதலால் சூழப்பட்ட நமக்கும் நிதமும் காதலர் தினமே..

திருமதி வி. சுபஸ்ரீ சரவணன், B.E
வேப்பங்குளம்.

# கூந்தல் பற்றி

எழுதத் தொடங்கியதும்
வகிடெடுத்துக் கொள்கிறது
வார்த்தைகள்

உன் நெற்றி வகிடு
என் கவிதைக்கான
ஒற்றையடிப்பாதை

மலைப்பாதையில்
பயணித்த களைப்பு
உன்நெற்றி வகிடுக்கு
கவிதையெழுதிய
பேனாவுக்கு

ஆலம் விழுதுபோல்
தொங்கும் உன்
சடையில்ஊஞ்சலாடுகிறது
ஒற்றை ரோஜா

ஒற்றையடிப்பாதை எனும்
நேர்வகிடில் பயணித்த
எனது கவிதை உன்
ஒற்றைச்சடை கண்டதும்
தொங்கும் தோட்டம்
என்று எழுதி முடித்தது

நீ சிகை அலங்காரம்
செய்து முடித்ததற்கான
முற்றுப்புள்ளி அந்த
ஒற்றை ரோஜா.

# எழுதுகோலை உதறிவிட்டு

ஆழ்ந்த சிந்தனையில்
மூழ்கியிருக்கிறேன் உதறிய
மை துளியாய் வானில்
நட்சத்திரங்கள்.

– ஆனந்தன்
திருப்பூர்



# மறைநீர்

ஐயா சொல்வேந்தர் சுகி சிவம் அவர்களின் காணொளி கருத்துக்களை தொடர்ந்து கேட்டும் உள்வாங்கியும் பல விடயங்களை சிந்தனை செய்வதுண்டு. அவ்வாறு நான் கேள்வியுற்ற ஒரு விடயம் தான் இந்த மறை நீர்.

மறை நீர் என்றதும் ஏதோ கோவிலில் பூசை செய்யப்பட்ட நீர் என்றோ அல்லது வேறு பொருள் தரும் சொல் என்றோ நீங்கள் நினைத்தால் உங்களுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சும்.

இன்றைக்குத் தண்ணீர் பஞ்சம் குறித்தும் நிலத்தடி நீர் இல்லாமல் போய் வெள்ளாமை குறைந்து விவசாயி தற்கொலை, போராட்டம் என ஒவ்வொரு நாளும் கேட்கிறோம், பேசுகிறோம். அனுபவிக்கிறோம். இந்தத் தண்ணீர் பிரச்சனைக்கு மறைநீரும் ஒரு காரணம். மறைநீரின் மதிப்பினை உணராததால் நீரின்றி தவிக்கிறோம். அது என்ன மறைநீர் எனக் கேட்கிறீர்களா? நாம் பயன்படுத்தும் ஒவ்வொரு பொருளுக்கும் உள்ளேயும் மறைந்திருக்கிறது மறைநீர்.

எளிதாகச் சொல்லவேண்டுமானால், ஒரு கிலோ அரிசிக்குரிய நெல்லை உற்பத்தி செய்ய 2500 முதல் 3000 லிட்டர்கள் தண்ணீர் தேவைப்படும்.

ஆனால் ஒரு கிலோ அரிசியை அதிகபட்சமாக அறுபது ரூபாய் கொடுத்து வாங்குகிறோம். இங்கு அரிசியின் விலையில் அது உற்பத்தி செய்ய பயன்பட்ட தண்ணீரின் விலை சேர்க்கப்படுவதில்லை. அப்படி கணக்கிட்டு பார்த்தால், ஒரு லிட்டர் தண்ணீர் ஒரு ரூபாய் என வைத்துக்கொண்டாலும்கூட ஒரு கிலோ அரிசி விலை 3000 ரூபாய்க்கு விற்கவேண்டி வரும். இப்படி ஒரு பொருளின் உற்பத்திக்குள் மறைந்திருக்கும் கண்ணுக்கு தெரியாத நீர், மறைநீர் ஆகும்.

நாம் உபயோகிக்கும் ஒவ்வொரு பொருளுக்குள்ளும் நாம் பெறும் ஒவ்வொரு சேவைக்குள்ளும் அதை உருவாக்க செலவழிக்கப் பட்ட நீர் மறைந்திருக்கிறது. கண்ணுக்குத் தெரியாமல் நாம் இரண்டு வகையில் நீரைப் பயன்படுத்துகிறோம். முதல் வகை நாம் பயன்படுத்தும் பொருள்கள் வழியாக; இரண்டாவது வகை நாம் உண்ணும் உணவின் வழியாக. நாம் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசிய பொருள்கள் முதல் ஆசைக்கு பயன்படுத்தும் ஆடம்பர பொருள்கள் வரையும் அவற்றின் உற்பத்தி குறித்தும் அதனை உற்பத்தி செய்ய செலவிடப்பட்ட தண்ணீர்த் தேவை குறித்தும் பேசுவது மறை நீர் ஆகும்

மறைநீர் என்பது ஒரு வகை பொருளாதாரம். மறைநீர் என்பது ஒரு தத்துவம். காற்றைப் போன்றது அது. கடவுளைப் போன்றது அது. தூணிலும் இருக்கிறது. துரும்பிலும் இருக்கிறது மறைநீர். மறைநீரை பார்க்க முடியாது. உணர மட்டுமே முடியும்.

“மறைநீர்” தத்துவத்தை கண்டுபிடித்தவர் இங்கி லாந்தைச் சேர்ந்த பொருளாதார வல்லுநர் ஜான் ஆண்டனி ஆலன். இந்தக் கண்டுபிடிப்புக்காக ‘ஸ்டாக்ஹோம் வாட்டர் - 2008’ விருது பெற்றவர்.

கோதுமை தேவை அதிகம் இருக்கும் ஒரு நாடு, ஒரு டன் கோதுமையை இறக்குமதி செய்யும்போது, அந்த நாடு 1,82,700 லிட்டர் அளவுக்குத் தனது நாட்டின் நீரைச் சேமித்துக்கொள்கிறது. அதாவது, ஒரு டன் தானியம், 1,82,700 லிட்டர் நீருக்குச் சமம்" என்கிறது மறைநீர்ப் பொருளாதாரம். இதைத்தான் இங்கிலாந்தைச் சேர்ந்த பொருளாதார வல்லுநர் ஜான் ஆண்டனி ஆலன், மறை நீர்ப் பொருளாதாரம் வாயிலாக உலகுக்கு எடுத்துச் சொன்னார். ``கோதுமை தானியத்தை விளைவிக்க நீர் தேவை. ஆனால், அது விளைந்தவுடன் அதை உருவாக்க பயன்பட்ட நீர் அதில் இருப்பது இல்லை. அதேசமயம் அந்த நீர் கோதுமை தானியங்களுக்காகத்தானே செலவிடப்பட்டிருக்கிறது அல்லது அதனுள் மறைந்திருக்கிறது. அதுதான் மறை நீர் (Virtual Water)" என்கிறார் அவர்.

நீரின்றி அமையாது உலகு என்பது சங்க காலம். மறைநீரின்றி அமையாது என்பதுதான் கையடக்க கணினி காலம். நாம் பயன்படுத்தும் ஒவ்வொரு பொருளுக்கும் உள்ளேயும் மறைந்திருக்கிறது மறைநீர். இதோ நீங்கள் படிக்கும் இந்த மின்னூலுக்குள்ளும், கணினித் திரைக்குள்ளும் கைப்பேசிக்குள்ளும் புதைந்திருக்கிறது மறைநீர்.

நமது பூமிப்பந்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் நீரில் 96.5 % கடல் நீர்தான். அது நமது பயன்பாட்டுக்கு உதவாது. இன்னும் 1% அமில நீர். அதையும் நாம் பயன்படுத்த முடியாது. இந்த புள்ளிவிபரத்தைக் கேட்டதும் பாதிபேருக்கு புரையேறியிருக்கும். இன்னும் கேட்டால் சற்று மயக்கம் வந்தாலும் ஆச்சரியமில்லை. கடல்தண்ணீர் போக மீதியிருக்கும் 2.5% தான் நாம் பயன்பாட்டுக்குத் தகுந்த நல்ல நீர். இப்போது நாம் நல்ல நீரை மட்டும் கணக்கில் கொள்வோம். 100% நல்ல நீரில் 69% அண்டார்டிகா போன்ற பகுதிகளில் உறைந்து கிடக்கிறது, 30% நிலத்தடியில் இருக்கிறது, 1% தான் ஆறு, ஏரி, குளம், குட்டைகளில் இருக்கிறது. என்ன தலை சுற்றுகிறதா?

பன்னாட்டு நிறுவனங்கள் நம் நாட்டில் வந்து தொழில் தொடங்குகின்றன, ஏன்தெரியுமா?

“மறைநீர்” இதுவும் ஒரு காரணம்.

முட்டை உற்பத்தியில் இந்தியாவில் முதலிடம் வகிக்கிறது மகாராஷ்டிரம். நாமக்கல்லுக்கு இரண்டாவது இடம். நாமக்கல்லில் ஒரு நாளைக்கு மூன்று கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதில் 70 லட்சம் முட்டைகள் தினசரி வளைகுடா நாடுகள், ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பா நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இதன் மூலம் ஆண்டுக்கு 4.80 கோடி டாலர்கள் அன்னிய செலவாணி கிடைக்கிறது.

மூன்று ரூபாய் முட்டைக்கு 196 லிட்டர் மறை நீர்.கண்ணுக்கு தெரியாமல் எப்படி களவு போகிறது பாருங்கள் நமது நீர்வளம்.

ஒரு கிலோ ஆப்பிளை உற்பத்தி செய்ய 822லிட்டர் தண்ணீரும் ஒரு கிலோ சர்க்கரையை உற்பத்தி செய்ய 1780லிட்டர் தண்ணீரும் ஒரு கிலோ காப்பிக் கொட்டையை உற்பத்தி செய்ய 18,900 லிட்டர் தண்ணீரும் தேவைப்படுகின்றது.

1.1 டன் எடைகொண்ட இலகு ரக வாகனத்தை உற்பத்தி செய்ய 4 லட்சம் லிட்டர் தண்ணீரும் தேவைப்படுகிறது.

ஒரு ஜீன்ஸ் பேன்ட் தயாரிக்க 10,000 லிட்டர் தண்ணீரும் தேவைப்படுகிறது.இதை சுகி சிவம் ஐயா சொல்லக்கேட்டு துணுக்குற்றேன். ஜீன்ஸ் பேன்ட் வாங்குவதை அன்றிலிருந்து நிறுத்திவிட்டேன். குளிர் பிரதேசத்தில் வசித்தாலும் முடிந்தவரை ஜீன்ஸ் பேன்ட் வாங்காமல் இருப்பதை கொள்கையாக மாற்றிக்கொண்டேன். இயற்கைக்கு நான் செய்யும் சிறு துரும்பு பணியாக எண்ணி இதை செய்து வருகிறேன். மறை நீர் குறித்து எனது 11 வயது மகளிடம் பேசியபோது வியந்து போனாள். வருங்காலத்தில் அவளும் ஜீன்ஸ் பாண்ட் அணிவதை இயற்கைக்காக தவிர்க்கலாம்.

முடிந்தவரை இளம்சந்ததினருக்கு விழிப்புணர்வு கொடுப்போம்.


காலையில் ஒருவர், ஒரு கோப்பை காப்பி அருந்துகிறார் என்று வைத்துக் கொள்வோம். அக்காப்பியில் உள்ள மறை நீரின் அளவு 140 லீட்டர் ஆகும்.

அதாவது ஒரு காப்பி செடியைப் பயிரிட்டு, வளர்த்து, கொட்டையை அறுவடை செய்து, தூளாக்கி, அதை கப்பலில் ஏற்றுமதி செய்யும் நாட்டின் நீர் அதில் மறைந்துள்ளது. இது ஒவ்வொரு ஏற்றுமதி பொருளுக்கும் பொருந்தும். இப்படி கணக்கிடும் போதுதான் ஒரு கோப்பை காப்பியின் மறை நீர் அளவு 140 லீட்டர் ஆகிறது. இந்த அளவானது ஒருவர் நேரடியாக புழங்கும் ஒருநாள் நீரின் அளவாகும்!

பாட்டிலில் அடைக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட ஒரு லிட்டர் குடிநீரின் சராசரி விலை ரூ.20. தமிழகத்தில் சுத்திகரிக்கப்பட்ட அம்மா மலிவு விலை குடிநீரின் விலை ரூ.10. இது

நமக்கு தெரியும். ஆனால், எத்தனைப் பேருக்கு மறை நீர் விலை தெரியும்?

நீரின் தேவையையும் பொருளின் தேவையையும் துல்லியமாக ஆய்வுசெய்து அதற்கு ஏற்ப உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி கொள்கைகளை வகுக்க வேண்டும். சீனா, இஸ்ரேல் மற்றும் சில ஐரோப்பிய நாடுகள் அப்படித்தான் செய்கின்றன.




உலகளவில் மிகப்பெரிய மறை நீர் ஏற்றுமதியாளர்களாக அமெரிக்கா, சீனா, இந்தியா, பிரேசில், அர்ஜென்டினா, கனடா, ஆஸ்திரேலியா, இந்தோனேசியா, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் உள்ளன. வட ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு, மெக்ஸிகோ, ஐரோப்பா, ஜப்பான் மற்றும் தென் கொரியா ஆகியவை மிகப்பெரிய மிகப்பெரிய மறை நீர் இறக்குமதியாளர்கள்.

உலக நீர்வளத்தில் 9% கொண்டுள்ள, உலகின் அனைத்து மற்ற பகுதிகளின் நீர் வளத்தை காட்டிலும் அதிகமான ஆறு, ஏரி போன்ற நீர் நிலைகளை கொண்டுள்ள தண்ணீர் தேசமான கனடா போன்ற நாடு கூட திடமான மறை நீர் கொள்கை வகுத்து பெரும்பான்மையான பொருள்களை இறக்குமதி செய்து நீர்வளத்தை பாதுகாக்கிறது .

நீர் பற்றாக்குறை உள்ள நாடுகளில் உள்ள தேசிய கொள்கை வகுப்பாளர்கள் உலகளாவிய நீர் சேமிப்பை விட தேசிய நீர் சேமிப்பில் அதிக அக்கறை காட்டுகின்றனர். நீர் பற்றாக்குறை உள்ள நாடுகள் அதிக நீர் பயன்பட்டு உற்பத்தி பொருட்களை இறக்குமதி செய்வதன் மூலம் தங்கள் உள்நாட்டு நீர்வளத்தை சேமிக்கும் பல திட்டங்களை வகுத்து தங்களது நீர் வளத்தை பாதுகாத்து கொள்கின்றன.

உதாரணமாக, மெக்ஸிகோ மக்காச்சோளத்தை இறக்குமதி செய்கிறது, அவ்வாறு செய்யும்போது, அதன் தேசிய நீர் வளங்களில் ஆண்டுக்கு 12 பில்லியன் கன மீட்டர்களை மிச்சப்படுத்துகிறது. நாட்டிற்குள் இறக்குமதி செய்யப்பட்ட

மக்காச்சோளத்தை உற்பத்தி செய்ய வேண்டுமானால் உள்நாட்டில் தேவைப்படும் நீரின் அளவு இது.

சீனாவின் பிரதான உணவு பன்றி இறைச்சி. ஒரு கிலோ பன்றி இறைச்சி உற்பத்திக்கான மறை நீர் தேவை 5,988 லிட்டர். அதனால், சீனாவில் பன்றி உற்பத்திக்கு கெடுபிடி அதிகம். ஆனால், தாராளமாக இறக்குமதி செய்து கொள்ளலாம்.

ஒரு கிலோ ஆரஞ்சுக்கான மறை நீர் தேவை 560 லிட்டர். சொட்டு நீர் பாசனத்தில் கோலோச்சும் இஸ்ரேலில் ஆரஞ்சு உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கு கெடுபிடிகள் அதிகம்.

இவ்வாறு தொலைநோக்கு பார்வை கொண்ட நாடுகள் அனைத்தும் ஒவ்வொரு பொருளுக்குமான மறை நீர் தேவையைத் துல்லியமாகக் கணக்கிட்டு அதன்படி ஏற்றுமதி, இறக்குமதி கொள்கைகளை வகுத்துள்ளன.

சரி நமது கதைக்கு வருவோம். பன்னாட்டு நிறுவனங்கள் இங்கு ஆண்டுக்கு லட்சக்கணக்கான கார்களைத் தயாரித்து அவர்கள் நாடு உட்பட வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன. ஏன்? அவர்களின் நாடுகளில் அவற்றை உற்பத்தி செய்ய முடியாதா? இடம்தான் இல்லையா? உண்டு. இங்கு மனித சக்திக்கு குறைந்த செலவு என்றால், நீர்வளத்துக்கு செலவே இல்லை. 1.1 டன் எடை கொண்ட ஒரு கார் உற்பத்திக்கான மறை நீர் தேவை நான்கு லட்சம் லிட்டர்கள்.

இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் தோல் பொருட்களில் 72% வேலூர் மாவட்டத்தில் இருந்தே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தியாவில் 2013-14-ம் ஆண்டில் தோல் பொருட்கள் ஏற்றுமதிக்கு 850 கோடி டாலருக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலிருந்து ஆண்டுக்கு சராசரியாக 5,500 கோடி ரூபாய்க்கு தோல் பொருட்கள் ஏற்றுமதியாகின்றன.

அன்னிய செலவாணி வருவாய் ஆண்டுக்கு சுமார் 10,000 கோடி ரூபாய். ஒரு எருமை அல்லது மாட்டின் ஆயுள்கால மறை நீர் தேவை 18,90,000 லிட்டர். 250 கிலோ கொண்ட அக்கால்நடையில் இருந்து ஆறு கிலோ தோல் கிடைக்கும்.

ஒரு கிலோ தோலை பதனிட்டு அதனை செருப்பாகவோ கைப்பையாகவோ தயாரிக்க 17,000 லிட்டர் மறை நீர் தேவை.

உள்ளாடை உற்பத்தியில் முதலிடம் திருப்பூருக்கு. ஏவுகணை தயாரிக்கும் வல்லரசுகளுக்கு உள்ளாடை தயாரிக்க தெரியாதா? 250 கிராம் பருத்தி

உற்பத்திக்கான மறை நீர் தேவை 2495 லிட்டர்கள்.

ஐரோப்பிய நாடுகள் மறைநீர் தத்துவத்தைப் பின்பற்றுபவை என்பதை இங்கு கவனிக்க வேண்டும். ஒரு பொருளின் விலை என்பது அதன் எல்லா செலவுகளையும் உள்ளடக்கியது தானே? அப்படி எனில், பெரும் நிறுவனங்கள் எல்லாம் தண்ணீருக்கு மட்டும் ஏன் அதன் விலையை செலவுக் கணக்கில் சேர்ப்பது இல்லை? ஏனெனில், நம்மிடம் இருந்து இலவசமாகத் தண்ணீரைச் சுரண்டி நமக்கே கொள்ளை விலையில் பொருட்களை விற்கின்றன அந்நிறுவனங்கள்!

இவற்றையெல்லாம் தெரிந்து கொண்டு நான் என்ன செய்ய போகிறேன் என்று கேட்கிறீர்களா?

முட்டையில் தொடங்கி கைபேசி உற்பத்தி வரைக்கும் கணக்கு பார்த்தால் நாட்டின் வளர்ச்சி என்னவாவது? நாடு வளர்ச்சி அடைய வேண்டாமா? வேலை வாய்ப்புகள் பற்றி  உனக்கு அக்கறையில்லையா?" என நீங்கள் கேட்பது காதில் விழுகிறது. ஆனால் நம் விளைநிலங்களும், மலை வளங்களும், நீர் நிலைகளும் அதிலுள்ள நீரும் சுரண்டப்படுவதைப் பற்றியும், அவை கைவிட்டு போவதைப்பற்றியும் அக்கறை கொள்ளாமல் வாகன தொழிற்சாலைகளும், அலைபேசி உற்பத்தி தொழிற்சாலைகளையும் துவங்குவது தான் வளர்ச்சி என்பது வளர்ச்சியாகுமா? ஏற்றுமதி என்ற பெயரில் தங்களது  நாட்டின் வளத்தை பாதுகாத்துக்கொண்டு நம் வளத்தைச் சுரண்டிக்கொண்டு வளர்ந்த மேலும் வாழ்ந்தால் பின்னர் ஏதுமில்லாமல் நிற்பது நாம்தான்.

சரி உலக நாடுகள் எல்லாமே இவ்வாறு மறை நீர் வர்த்தகத்தைச் செய்து கொண்டு தானே இருக்கின்றன. நமக்கு மட்டும் என்ன வந்தது என்று நினைக்கலாம். தற்போதைய நிலையில் நீர் சுழற்சி அளவானது இந்தியாவில் குறைந்துகொண்டே வருக்கிறது. இது 1962-ம் ஆண்டில் 4,083 கியூபிக் மீட்டலிருந்து 2002-ம் ஆண்டில் - 1753 கியூபிக் மீட்டராகக் குறைந்து, தற்போது 2014-ம் ஆண்டில் 1,458 கியூபிக் மீட்டர் என ஆகிவிட்டது. இதே வேகத்தில் செல்லுமேயானால் 2025-ம் ஆண்டில் 1200 கியூபிக் மீட்டராகக் குறைந்து 2050-ம் ஆண்டில் 1000 கியூபிக் மீட்டரை விடக் குறைய வாய்ப்புள்ளது என வல்லுநர்கள் எச்சரிக்கை செய்கிறார்கள்.

மறை நீருக்கு மதிப்பு கொடுத்திருந்தால் ஐயா அப்துல் கலாம் சொல்லிற்கிணங்க வல்லரசு பட்டியலில் என்றோ இடம் பிடித்திருக்கும் இந்தியா. இனியாவது இந்திய அரசு மறை நீர் தத்துவத்தை உணர வேண்டும்! மூன்றாம் உலகப்போர் என்று ஒன்று நடைபெற்றால் அது நீருக்காகவே நடைபெறும் என புவியியலாளர்கள் கூறுகிறார்கள். இயற்கை ஆர்வலர்களும் அமைப்புகளும் அவ்வழிவைக் கட்டுப்படுத்த சமூகத்தில்

மக்களிடம் இயற்கை குறித்த புரிதல்களை ஏற்படுத்த வேண்டும்.

நீர் அதிகம் தேவைப்படும் உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்வதைத் தவிர்த்து தேவைக்கேற்ப இறக்குமதி செய்துகொள்ள வேண்டும். இதனால் நாட்டின் நிலத்தடி நீரும், ஆற்று நீரும் சேமிக்கப்படும். இறக்குமதி செய்வதால் நமது நீர்வளத்தை பாதுகாக்கலாம் ஆனால் அதே நேரத்தில் நாம் மற்றுமொரு நாட்டின் வளத்தை களவாடுகிறோம் என்பது தான் உண்மை.

உற்பத்தி செய்ய வேண்டாம் எனச் சொல்லவில்லை. கண்ணை மூடிக்கொண்டு தனியார் நிறுவனங்களுக்கும் வெளிநாட்டு முதலாளிகளுக்கும் பொத்தாம் பொதுவாய் உற்பத்தியோ ஏற்றுமதியோ செய்ய வேண்டாம் என்றுதான் சொல்கிறோம். மறை நீர் பொருளாதாரமும் "தேவையில்லாமல் ஏற்றுமதி, இறக்குமதி செய்ய வேண்டாம்" என்பதையே வலியுத்துகிறது .

ஏற்கெனவே தமிழகம் நீர் பற்றாக்குறை மாநிலம், அப்படியிருக்கையில் நாம், மறைநீர் மூலமும் நீரை வீணாக்க வேண்டுமா? மறைநீர் என்னும் மந்திரச்சொல்லை உள்வாங்குவோம். மறைநீரை மொத்தமாக தவிர்த்து விட முடியாது. ஆனால் தவிர்க்க வேண்டிய உற்பத்தியை தவிர்த்து நீர் இருப்பை தக்கவைக்கலாம்.

நாடு தான் ஆக்க பூர்வ செயல் செய்ய வேண்டும் நான் என்ன செய்ய முடியும் என தனிமனிதன் எண்ணுதல் கூடாது. நாடு என்பது ஒவ்வொரு தனி மனிதனும் அங்கம் வகிக்கும் ஒரு கூடு. அதனால் தனி மனிதனாக மறை நீர் பற்றி முதலில் அறிந்து கொள்வோம். மறை நீர் தத்துவத்துக்கு தற்சார்பு பொருளாதாரம் மற்றும் சுற்று சூழல் பற்றிய விழிப்புணர்வு, இயற்கையோடு இயைந்த வாழ்வு ஆகியவை ஒரு தீர்வாக அமையும். அதிக தண்ணீர் கொண்டு உற்பத்தி செய்யப்படும் அனாவசிய பொருட்களை வாங்குவதை கட்டுப்படுத்திக் கொள்ளலாம். ஒவ்வொரு மனிதனும் தனக்கு தேவையான பொருட்களை குறைந்த பட்சம் அன்றாட வாழ்வியல் பொருள்களை மாடித்தோட்டம் போன்ற முறைகளின் மூலம் உற்பத்தி செய்து கொள்ளலாம்.

நீர்வளத்தைப் பாதுகாக்க நாட்டின் மேல்புற நீர்வளம் மற்றும் நிலத்தடி நீர்வளம் குறித்து அக்கறை கொள்ள வேண்டும். நாம் நமக்காகவும் நமது சந்ததியினருக்காகவும் தண்ணீரை பாதுகாக்க கடமைப்பட்டுள்ளோம். மேலும் யாருக்காகவும் இல்லாமல் உங்களுக்காக நீங்களே சில உறுதி மொழிகளை எடுத்துக்கொள்ளுங்கள் அதை பின்பற்றுங்கள்.

நெகிழி பை பயன்படுத்துவதில்லை.

பொது கூட்டங்கள், வீட்டு விழாக்களில் தண்ணீரை குவளையில் (தம்பளர்) வைப்பேன்.

நீரை சிக்கனமாக பயன்படுத்துவேன்.

முடிந்தளவு விழிப்புணர்வு அடைய செய்வேன்.

உணவு பொருட்களை வீண் செய்யமாட்டேன்.

செடி நடவு செய்து மரமாக்குதல்
தற்சார்பு பொருளாதாரத்தை அறிவோம்.

அனாவசிய ஆடம்பர பொருள்களை தவிர்ப்போம்.

இப்படி ஏதாவது ஒரு உறுதிமொழியை நம்மால் பின்பற்ற முடிந்தவற்றை உறுதி மொழியாக கொள்கையாக எடுத்துக் கொள்வோம். நம் சந்ததியினருக்கு நல்லதொரு பூமியை கையளித்து செல்ல வேண்டியது நம் தலையாய கடமையாகும். மறை நீர் பற்றி மனதில் நிறுத்துவோம். மனித இனத்தை மறையாமல் காப்போம்.



— இளவரசி இளங்கோவன்,
கனடா வாழ் தமிழச்சி

# கணித நதியின் கட்டுக்குள்

அடங்காத தூரத்தைப்
பார் என்றால்
எப்படிப் பார்ப்பது
வான் வழி பிரிதியின்
ஒன்பது குடும்பங்களில்
சோதிட கணக்குகள்
பிரபஞ்சத் துளியில்
உயிர்களுக்கு
யுகங்களில் சில நாள்
வட்டப்பாதையில் விலகி
காலவெளியின்
கணக்கற்ற நிமிடங்கள்
கண்டறியா விலகல்கள்
பரிணாமம் படபடக்க
டார்வினின் குரங்கொன்று
கெக்கலித்தது
இன்றோ
டோலி ஆடு சோதனையில்
அழகான பிரவாகத்தின்
ஆராய்ச்சியில் கடவுளின்
கருணையில்லை
நட்சத்திரத்தின் சிறகுகள்
அழைத்துவிட
ஒளி அழைக்கிறது
பல கோடி மைல்களுக்கும்
திசையெங்கும்
அணுவுக்குள் அணு அடங்கி
பிறந்தது $E = mc^2$
சோதிட கணக்குகளைப்
பொய்க்கச்செய்தது அறிவியல்
சூத்திரங்கள்
ஜப்பானில் காகித கொக்கு
செய்து கரைந்து போனாள் சடகோ
சசாகி
அந்த கொக்கின் சிறகுகள்
அமைதியை எழுத உலகம் முழுவதும்
பறக்கிறது
அவள் உடலில் வசித்த பழைய
அணுக்களின் வாசம்
இன்னும் வீசிக்கொண்டிருக்கிறது
டார்வினின் புதிய குரங்குகள்
ஈன்ற குட்டிகள் குளறுபடிகள்
எங்கோ ஒரு குரல்
வெடிக்கிறது
இந்த பெருவெடிப்பின் மூலையில்
கரை காணாத கணித நதிக்குள்
நீந்தி மகிழ்கிறது உலகம்
முள்ளிவாய்காலின் உதிர நதி
தமிழ் அணுக்களாய் உறைந்துபோனது
எல்லையில் பதற்றம்
மனதின் எல்லை விரிகிறதா
கண நேரச் சுருக்கம்
மீண்டும் வால் முளைக்கிறது
மனிதர்களுக்கு.

--------------------------

# வறட்சியிலும்

முட்களிலும் மொழி பூத்து
நிற்கிறது
பாலைவனம் தன் மொழியோடு
விரிந்து கிடக்கும் போது
மணல் விரிப்பில்
நிழலாய் தேடுகிறோம்
அங்குப் பறக்கும் பறவையிலும்
ஒட்டகத்திலும்
சில மரங்களிலும்
செடிகளிலும்
பாலைவன நிலவிலும்

துளிர்த்துக்கொண்டேதான் இருக்கிறது
அந்த நிலத்திற்கான மொழி
பிரபஞ்சத்தின் பின்பக்கத்திலும்
விரிந்து கிடக்கும் மொழியின்
கலையில்
இரு வேறு பிரமிப்பான நகரங்களைத்
தேடுகிறோம்
அது இறந்தவர்களின்
மொழியைப்போன்று
இறுக்கமற்று இசைக்கிறது
வறட்சியின் மொழிகள்
வெறுப்போடு இறுக்கமாக இசைத்து
வெளிப்படுத்தி
கொண்டேயிருக்கிறது
முட்களின் மொழிகள் ஆயுதமிழந்தே
நிற்கிறது.

— ப.தனஞ்ஜெயன்.
danadjeane1979@gmail.com
9751800333

## இது ஆத்திக பெட்ரோல்
## இது நாத்திக பெட்ரோல்

என்று
விற்றுக் கொண்டிருந்தார்கள்

எந்த பெட்ரோல்
எத்தனை கிலோ மீட்டர் கிடைக்குமென்றேன்

இரண்டும் ஒரே கிலோ மீட்டர்தான்
ஐம்பதிலிருந்து அறுபதுக்குள்

கொஞ்சம்
தூரம்போனால் எழுபதென்று முடித்தார்கள்.

- குமரன்விஜி

# கேளடா மானுடா

கனன்று எரியும் மரங்களில்
மயானம் தாங்குமா
பறவைகள்

வடக்கிருந்து வயல் புகுந்தது
தெரியுமா
வழி மாறிய புலி

அடி வயறெரிய
அண்ணாந்து பாக்கும் கரடிக்கு
அதனுயர கவலை

யானைக்கும் அடி சறுக்கும்
காணும் பார்வைக்கு
நொடி சறுக்கும்

தீக்குள் விரலை வைத்த
அக்னி குஞ்சும் அலறுகிறது
குழந்தையென திரியும்
குரங்கெத்தனையோ கருகியது

கூவும் குயில்
ஆடும் மயில்
ஓடும் முயல்
ஒளியும் நரி
எல்லாம் சாகுமே
செடி கொடி எல்லாம் வேகுமே

ஆழ்மனம் பதற அஞ்சும்
ஆணவமெல்லாம்
எரிந்தது போதும்
கெஞ்சல் கேள் நெருப்பே

தெரிந்து தான் செய்தானோ
தெரியாமல் எய்தானோ
எரிகின்ற பெரு நெருப்பை
நிறுத்திட வா மழையே

தீ என்றாலே சுடுகிறது சொல்லும்
காட்டுத் தீ என்றாலோ
நடுங்குகிறது புல்லும்

காடழிந்தால் நாடழியும் மானுடா
நாமழிந்தாலும் காடழியக் கூடாது
கேளடா...

------------------

# இருள் சூழ்ந்த மதிய கனவு

மனம் போன போக்கில் நடக்கிறேன்
வீதி நாய்க்கு போட்டி நான்
வாலில் திரும்பி பார்க்கிறேன்
வீணை சத்தம் ஞாபகத்தில்

சுவரொட்டி ஓவியத்தை
முதுகில் சுமக்கிறேன்
காதல் கழுதை நினைப்பெனக்கு

அருவி கொட்டும் அக்குளில்
அர்த்த ராத்திரி ரகசியம்
மூட்டைப்பூச்சி ரீங்காரம்
முத்தப்பூச்சி ஆங்காரம்

மதி மயங்கிய ஊருக்குள்
மாற்றி நடக்கிறது வீதி
இருள் சூழ்ந்த மதியக் கனவென்று
இனியும் எப்படி நம்ப

மூங்கில் வனம் தாண்டிய போது
புத்தன் பாவனை எங்கிருந்தோ
மூக்கு நீண்ட குரங்கின் புன்னகையை
சிற்றோடை கலைத்தது

விடிகையில் கதவு தட்டுகிறேன்
பிச்சையிட்ட மானுட உடல்
மறுதலிக்காமல் அழைத்துக்
கொள்கிறது
ஊர் சுற்றிய உயிர்
மீண்டும் உடல் சுற்றிக் கொள்கிறது...!
------------------

# சிலுவையாகிறேன் நான்

பலம் கொண்டு அறைகிறேன்
மறுகன்னமும் வீங்க
மறுபடியும் அடி என்கிறாள்

வார்த்தைகளை துப்பும் என் எல்லா
தப்புகளையும் சுத்தம் செய்து
புன்னகைக்கிறாள்

எட்டி உதைத்த கால்களில்
முத்தமிடுபவளை என்ன செய்வது

நகம் உடைத்து நம்பிக்கை உடைத்தும்
முகம் கோணாத புன்முறுவலை
என்ன தான் செய்வது

மடியில் தாங்குகிறாள்
மார்பில் தாங்குகிறாள்
மனதுள் தாங்குகிறாள்

கழுத்தறுப்பதை போல காதலையும்
அறுத்திருக்கிறேன்
அப்போதும் அன்பே தான் நான்
அவளுக்கு

முற்றிலும் கடவுளாகி விட்ட
காதலியிடம்
மன்னிப்பு கேட்பது பிற்பாடு தான்
அதற்கு முன் கை விரித்து கும்பிட்டு
சிலுவையாகிறேன் நான்....!
------------------

# நெல் பூத்த மணித்துளி நீ

மலையேறும் மிதி வண்டியைச்
சத்தத்தில் நீ இருக்கிறாய்
உன் நினைப்புக்கு சாலையோர
மரங்களின் வனப்பு

வந்து போகும் காகத்திடம்
மிச்சமிருக்கும் தூரங்கள் நீ
கண்டுணர முடியாத வானத்தின்
முணுமுணுப்பு உன் முத்தம்

வந்தபடியே இருக்கும் நதிகளில்
வாகாக கிடக்கும் கூழாங்கற்களில்
உன் பளிங்கு

தேன் கூட்டில் காலமும்
சேர்ந்திருக்கிறது
என்கிறதாய் இனிக்கும் உன் சொற்கள்

ஆராதிக்கிறேன் எனும் போதெல்லாம்
புல் பூத்த பனித்துளி நீ

காதலிக்கிறேன் எனும் போதெல்லாம்
நெல் பூத்த மணித்துளி நீ

கனவு உடைந்த இரவுக்குள் நீள் வட்ட
குறுக்கு சந்து நாம்
யாருமறியா நமக்கு நடு சாமத்தில்
ஒற்றை உடம்பு
அதிகாலையில் ரெட்டை வேடம்...!

*
கடித்தவுடன் ஊதி நகர்த்துகிறாய்
பிடித்த கனவு பாதியில் நிற்கிறது
எறும்புக்கு

*
கோயில் புறாவுக்கு என்ன தெரியும்
உன் வீட்டு நாய்க்குத்தான்
சிரிக்கத் தெரியும்

*
நீ உள் நிற்கும் வரை
ஆடை அணிந்திருக்கிறது
ஆறு

*
இன்னொரு கப்பலையும்
கவிழ்க்கிறேன்
கன்னத்திலிருந்து கை எடுக்காதே

*
புத்திகெட்ட குடுகுடுப்பைக்காரன்
உன் வாசலில் நின்று
நல்ல காலம் பொறந்துருக்கு
என்கிறான்
நானாக இருந்தால்
நல்ல காதல் பொறந்துருக்கு
என்றிருப்பேன்

*
பூக்கள் சிரிக்கும் பூக்கள் அழும்
பூக்கடைக்காரி சொல்கிறாள்
சரியாகத்தானிருக்கும்

*
கடற்கரையில் இருவேறு
ஒற்றை செருப்பு
வாழ நினைப்பவன் அணிந்து
செல்கிறான்

*
சரிந்து கிடக்கும் செருப்பு
வாசலை
கோணலாக்குகிறது

*
வாழத் தெரியாதவனுக்கு
சாகவும் தெரியாது

*
யானையை அசைத்து பார்க்கும்
கனவு
விடிய விடிய சுமை

*
சாவு வீட்டில் அழுங்கள்
சாவு வீட்டிலாவது அழுங்கள்

*
அதிகாலையை
வெட்டி முறிக்கிறேன்
கால் நெட்டைக்கு காதிருக்கிறது

*
பின்னிரவை பொறுக்குகிறேன்

கெண்டைக் காலில் மிச்சம் இருக்கிறது
இன்னும் ஒரு மச்சம்

*
உயிரற்ற காகம்
நினைவுகளை பறக்க விடுகிறது
மறதிகளை மறக்க விடுகிறது

*
பின் வீட்டு காதுகளை
குரலால் அடைக்கிறாள்
முன் வீட்டுக்காரி

*
ஆயுட்கால இலையுதிர் காலத்தை
அனுமதிக்கிறேன்
அது உன்னையும் சேர்த்தே
உதிர்க்கிறது

*
காக்கைக்கு தெரிகிறது
உன் பாதம் பட்ட இடத்தில் எல்லாம்
தாகம் தீர்க்கலாம் என்று

*

— கவிஜி

---

# வடுவூர் சிறப்பு (கபாடி)

வந்தாரை வாழவைக்கும் வடுவூர்

வடுவூர் என்றாலே ஞாபகம் வருவது விளையாட்டு அதிலும் குறிப்பாக கபாடி .

வடுவூர்க்கு விளையாட்டு கிராமம் என்ற சிறப்பு பெயரும் உண்டு.

படர்ந்து விரிந்த ஆலமரத்திற்கு பல கிளைகள் உண்டு.

அதை போல் வடுவூர் மண்ணில் பல கபாடி அணிகளும் உண்டு.

வடுவூர் மண்ணில் பிறந்த ஒவ்வொரு ஆணும். ஒவ்வொரு பெண்ணும் கபாடியை தன் உயிருக்கு மேலாக விரும்பகூடியவர்கள்.

கபாடி போட்டியில் வடுவூர் அணி ஆடுகளத்தை ஓடுகளம் ஆக்க களத்தில் இறங்கினால் போதும். களத்தை சுற்றி மக்கள் கூட்டம் அலைமோதும்.

வடுவூர் கபாடி வீரர்கள் தொடையைத் தட்டி களத்தில் இறங்கினால் போதும்




எதிரணிக்கு எதிரே எமன் வருவது போல் தெரியும்.

பல ஊர்களுக்கு, பல இடங்களுக்கு சென்று வெற்றி புள்ளிகளையும் வெற்றிக் கோப்பைகளையும் குவித்தவர்கள் வடுவூர் கபாடி வீரர்கள்.

ஆணாக இருந்தாலும் சரி. பெண்ணாக இருந்தாலும் சரி. வீட்டுக்கு ஒரு கபாடி வீரர்கள் என வீரம் விளைந்த மண்ணாக திகழ்கிறது வடுவூர்.

தன்னைப் பெற்ற தாயை நேசிக்க கூடிய அளவிற்கு கபாடியயும் மண்ணையும் நேசிக்கக் கூடியவர்கள் வடுவூர் கபாடி வீரர்கள்.

கபாடி, வாலிபால் மட்டும் அல்லாமல் மற்ற விளைட்டுகளிலும் தடம் பதித்து வெற்றி புள்ளிகளை நாட்டியவர்கள் வடுவூர் வீரர்கள்.

வடுவூர் மண்ணில் பிறந்தவர்கள் யாரும் கபாடி விளையாடாமல் இருந்து இல்லை அப்படி இருந்திருந்தால் கபாடியை உயிர் மூச்சாக நினைப்பார்கள்.

கபாடி போட்டிக்கு செல்லும் பொழுது வெறும் கை...
திரும்பி வரும்பொழுது வெற்றிக் கோப்பை...

ஏழு சிங்கம்
அவர்கள்தான் வடுவூரின் தங்கம்

வடுவூர் மண்ணில் பிறந்ததற்கு பெருமிதம் கொள்கிறேன்.



வாழ்க வடுவூர்
வளர்க கபாடி.

சிவா,
வடுவூர் வடபாதி

## கசங்கிய விழிகள்

கார்காலத்தின் நிறையவெள்ளம்
நிரம்பி
அல்லிகளான புன்னகைகளாலும்
தாமரைகளான வெட்கங்களாலும்
கரைதொடும் சிற்றலை
மென் முத்தங்களாலும்
என்மேல் செழித்திருந்த நீ
கோடையின் வறண்ட பேரிடரால்
கானல்பரப்பி விலகியதை
இன்னும் நம்பத்துணியாமல்
பெருமழைக்காலம் நோக்கி
கசங்கிய விழிகள் கூர்ந்து
எதிர்ப்பார்க்கிறேன்
ஆலங்கட்டியாய் பொழிந்திடலாம்
மீண்டுமொரு நன்னாளில்
உன் வசப்படுதலின் பேரருள்வான்?

## விடலைத்துளிர்

பெயர்த்தெரியா காட்டுக்கொடியின்
வளம்நிறைந்த பின்னல்களால்
மொத்தமும் படர்ந்து
வண்ணப்பூக்களால்
நறுமணம் பரவுகிறாய் இதயமெங்கும்
உன் ஆடம்பர பேரன்பில் மூடி
வாழ்வின் வனத்தை
வசந்தங்களால் நிரப்புகிறேன்
மென்சூட்டால் இறுகி
தீங்காதல் பதிக்கின்றன
பொன்னிறத்தில் அரும்பும்
மேலும் உன் விடலைத்துளிர்கள்!

## அடைமழை

இதயத்தின் ஆழத்தில்
தேன்தீண்டும்
உன் மோகன நினைவுகளால்
உயிர்த்தழைத்து இன்புறும் நான்
பிணிக்கு மருந்தின்றி
ஆழ்ந்த மௌனமுடன்
சாலையை வெறித்து நோக்குகிறேன்
இடையின்றி பொழிகிறது
கண்ணீரின் அடைமழை!

## நறுமணம்

முப்பொழுதும் உன்னைப்பற்றிய
நறுமண நினைவுகளோடு
அடிக்கடி நான்
வந்துசெல்லும் வீதியின்
உன்வீட்டு வாசலில்
வண்ணக்கோலங்களின் வரவேற்பு
யாருக்காக என்பதை
வெட்கங்களின் வழியாகவே
இன்னமும்
உதிர்த்துக்கொண்டிருக்கிறாய் நீ!

## தனித்த பாடல்

இரவுக்கடலின் தொடுவானத்தில்
மின்னல் கீற்றுகளாய்
உனை வரைந்து உதித்தெழும்
பூரண நிலவொளியில்
அறையின் சன்னல் திறந்து
இதயம் பிய்த்து விரையும்
ஒற்றைக்குயிலின் தனித்த பாடல்
தாழிட்ட உன் வீட்டின் கதவினில்
மோதி
சிதைந்து துடிப்பதை
எந்த நட்சத்திரம் தைத்து
அறிந்துகொள்வாய் நீ!

— பொன்.தேய்வா
ஐவேலி



# யாருக்கும் பரிசளிக்கப் போவதில்லை...

நீயென் வீட்டிற்கு வரும்
தருணங்களில்
தவறாமல் வருகிறது.
பக்கத்து வீட்டின்
கருப்பு நிறப் பூனை.
உன்னை அச்சுறுத்தவும்
என்னை மகிழ்விக்கவும்.

உன் மீது வைத்திருக்கும்
மரியாதை நிமித்தம்
எதிர்த்துப் பேசாமல்
இருக்கிறான்;அவனொன்றும்
பேசத் தெரியாதவனல்ல.

எனக்காக அனல் பறக்க
கூர் தீட்டிய ஆயுதத்தை
என்னில் இறக்கிடு.
உன் இதயத்தில் மூன்றடுக்கு
பாதுகாவலில்
பத்திரமாக இருக்கிறேன் நான்.

எரிகின்ற விளக்கை
நீங்கள் யாரும்
அணைக்கவில்லை.
அதை
நான் அறிவேன்.
அதுகுறித்து காற்றிடமும்;
திரியிடமும், நெய்யிடமும்;
முறையிட முடியாததால்
அச்சுடருக்காக
உங்களிடம் வாதம்
செய்கிறேன்.

ஒருத்திக்கு தந்து
சில பல காரணங்களால்
நிராகரித்த என்னிதயத்தை;
காதல் முலாம் பூசி
வேறு யாருக்கும்
பரிசளிக்கப் போவதில்லை
நான்.

சாலையில் தனித்து
பயணிக்கும் ரயில் பூச்சி;
விபத்தில்லாமல்
இன்னும் எவ்வளவு தூரம்
கடக்குமென்று;
நீங்களொருவரும்
யோசிக்காத அவ்வேளையில்;
அதை அந்தப் பக்கமாய்
கடத்தி விட்டு வந்திருக்கிறேன்
நான்.

யாரும் சொல்லாமலே
இருபுறமும் நல்வாழ்க்கை
அமைத்துக்கொண்டு
கடல் சேரும் நம்பிக்கையுடன்
இனிதே பயணிக்கிறது நதிகள்.

மரமொன்றை
பார்த்துப் பார்த்து வரைகிறாள்
கீர்த்தி குட்டி.
அவள் பக்குவமாய்
மரத்தைப் பத்திரப்படுத்தியும்;
நான்கைந்து கனிகள்
கீழே சிதறிக் கிடக்கின்றன.

வீட்டில் நான் மட்டும்
தனியாய் இருப்பதைத்
தெரிந்துகொண்டு
அடிக்கடி வந்து போகிறது
உன் நினைவுகள்.

பூமியில் புதையும்
போதுதான்
பிறவிப் பயனுக்கான
அங்கிகாரம் கிடைக்கிறது
விதைகளுக்கு.

சிலந்தி வலையில்
சிக்கும் வரை;
குழல்விளக்கின் வெளிச்சத்தில்;
ஆனந்தமாய்ச் சுற்றித் திரிந்தது
சிறுபூச்சி.

ஓடும் ஆற்றில் காணும்
பிம்பங்கள் யாவும்
அரவமாய் நெளியும்.

ராட்சத பாம்பு
சட்டை உரித்திருக்கிறது
வெள்ளமற்ற நதி.



- உணர்வும்
ஆக்கமும்
பாரியன்பன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353



குமாரி,
புழல்,
சென்னை

# துளிப்பாக்கள்

என்னுள் மணக்கிறது
காதல் வாசம்
இதயத்தில் நீ

சுவாசிக்க மறந்து
நேசிக்கிறேன்
உயிர் மூச்சாய் நீ

உறங்கும் போதெல்லாம்
விழித்துக்கொள்கிறது
நம் காதல்

எரிக்கும் பார்வை
குளிர்ச்சியாக உள்ளது
உன் கண்களில் நான்

பேசி முடித்த பிறகும்
பேசிக்கொண்டே இருக்கிறேன்
எனக்குள் நீ

உன் விழி ஈர்ப்பில்
ஒட்டிக்கொள்கிறது
என் இதயம்

பெ. விஜயலட்சுமி
காஞ்சிபுரம்



அட்டைப்பட
ஓவியம்:



இரா.மதுவர்ஷினி,
சரஸ்வதி வித்யாலயா பள்ளி,
பெருவிடைமருதூர்.

# செங்கிஸ்கான் நெஞ்சுறுதியோடு மரணத்தை முத்தமிட்ட மாவீரன்

தோலனே ஆருயிர் நண்பனே விதியிலெல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை. தலையெழுத்தை நம்பியிருந்தால் இவ்வளவு பெரிய பேரரசை நான் கட்டமைத்திருக்க முடியுமா? இந்த விபத்து என்னை முடக்கிவிட்டது. என் கைகளை வாளின்றி இப்போதுதான் நான் பார்க்கிறேன். என் பெயரைக் கேட்டாலே யானைக்கு மதம் பிடிக்கும் அப்படிப்பட்ட வீரன் நான். மாமன்னர்கள் எல்லாம் என் பெயரைக் கேட்டாலே நடுநடுங்குவார்கள். இன்னும் சில ஆண்டுகளில் முழு உலகமும் என் காலடியில்தான் கிடக்கப் போகிறது. மண்ணரசை வென்றுவிட்ட எனக்கு வானவர்கள் துதிபாடுவார்கள். எனக்கு சாமரம் வீச நீ நான் என போட்டி போடுவார்கள். என் தந்தையை விஷம் வைத்து கொலை செய்த டட்டார் இனத்தவர்களில் ஒருவர் கூட இன்று உயிருடன் இல்லை. உண்மையான வீரன் போர்க்களத்தில் தான் மரணிக்க ஆசைப்படுவான். அப்போதுதான் உயிர் பிரியும்வரை குதிரையின் குளம்பொலிகள் காதில் கேட்டுக் கொண்டே இருக்கும்.

எனது வானத்தில் சூரியன் மறைவதே இல்லை. எனது நம்பிக்கைக்குரியவர்களே துரோகிகளான போது நான் இடிந்து தான் போனேன். போர்டே என் உயிர் என்று தெரிந்துதான் என்னைப் பழிதீர்க்க அவளைக் கடத்திச் சென்றனர். மங்கோலியப் பேரரசின் கொடி சீனாவில் பறக்கும் நாள் வெகுதொலைவில் இல்லை. இந்த செங்கிஸ்கான் எதிரிகளை மன்னிப்பானே ஒழிய துரோகிகளை அல்ல. என் வாழ்நாளில் பசுத்தோல் போர்த்திய புலிகளை நிறைய பார்த்துவிட்டேன். எனக்கு குழிபறித்த வம்சத்தையே வேரறுக்காமல் அவர்களுக்கு தாலாட்டுப் பாடிக் கொண்டிருப்பேனா. என் மனைவியை கடத்திச் சென்றதன் மூலம் நீங்கள் வீரர்களல்ல கோழைகள் என்று இன்னொரு முறை நிரூபித்து விட்டீர்கள்.

நான் மண்ணைக் கவ்வ வேண்டும் என்று நினைத்தவர்களையெல்லாம் மண்ணுக்கு இரையாக்கினேன். எனது அடிமைகளுக்கு அண்ணாந்து பார்க்கக்கூட உரிமையளித்ததில்லை நான். தயவுதாட்சண்யம் பார்த்தேனென்றால் ஒரு பேரரசின் சக்கரவர்த்தியாகியிருக்க முடியுமா? களம் காணவேண்டும் வாளேந்த வேண்டும் என்ற வேட்கை இன்னும் தணியவில்லை. இந்தக் கைகள் எத்தனை தலைகளைப் பந்தாடி இருக்கின்றன. எத்தனையெத்தனை வீரத்தழும்புகள் என் உடலில் உள்ளன. எனது எந்த முக்கியமானத் தீர்மானமும் இதுவரை தோற்றதே இல்லை. பூமியே அதிரும்படி நான் செய்த சிம்ம கர்ஜனையால் தரைமட்டமான கோட்டைகளும் உண்டு. வீரவசனம்

பேசியவர்களெல்லாம் எனக்கு எதிராக நேருக்குநேர் நிற்க முடிந்ததா? இந்த செங்கிஸ்கானிடம் பணிய மறுத்தவர்களின் குருதி நதியில் வெள்ளமாக பாய்ந்ததை பார்த்தீர்கள் அல்லவா?

இந்த செங்கிஸ்கானின் குதிரை போர்க்களத்தில் பின்னால் ஒருஅடி எடுத்து வைத்து பார்த்ததுண்டா? இந்த ஓய்விலும் மனம் செய்ய வேண்டிய போர்களைப் பற்றியே எண்ணிக் கொண்டு இருக்கிறது. இந்த செங்கிஸ்கானின் பேரரசு தான் உலகின் ஒரே பேரரசாக நின்று நிலைக்கப் போகிறது. எனது ராஜ்ஜியத்தின் எல்லைகளை விரிவாக்க இன்னும் பல போர்களை நான் செய்தாக வேண்டும். துரத்தியடிக்கப்பட்ட அடிமைகள் ஒன்று கூடிவிடாமல் பார்த்துக் கொள்வதில்தான் இருக்கிறது ராஜதந்திரம். எந்தப் புற்றில் பாம்பிருக்கும் என்று அறிவதில் வல்லவன் நான். கால்தடம் புலியினுடையதா பூனையினுடையதா என என்னால் மட்டுமே அறிய முடியும். எந்த திட்டத்தை யாரிடம் ஒப்படைப்பது என யாரும் எனக்கு பாடம் எடுத்ததில்லை. எந்த மன்னனும் என் வியூகத்தை உடைத்து வெளியே வந்ததில்லை.

பகைவனுக்கு மரணத்தை கண்முன் காட்டுவதில் தான் எனது வெற்றி அடங்கியிருக்கிறது. உயிரா, ராஜ்ஜியமா என இரண்டில் ஒன்றை தேர்ந்தெடுக்க வாய்ப்பு தருவதில் தான் அடங்கியிருக்கிறது என் வில்லத்தனம். உச்சியில் அமர்ந்திருப்பவன் சந்தேகக்கண் கொண்டுதான் எல்லோரையும் பார்க்க வேண்டும். வரலாறு என்னை கொடுங்கோலன் எனத் தூற்றும் என கவலைப்பட்டிருந்தால் நான் ஆள்வதற்கு காணி நிலம்கூட இருந்திருக்காது. நியாயம், தர்மம் முதலியவை குழிதோண்டிப் புதைக்கப்பட வேண்டியவை என்பதே என் கருத்து. நான் வாழும் காலத்திலேயே என் கனவு நனவாக வேண்டுமென்பதே என் விருப்பம். போர்க்களத்தில் சரணடைந்தவர்களுக்கு உயிர் பிச்சை அளிப்பது என்பது பாம்புக்கு பால் வார்ப்பதற்குச் சமம். அகிலமே என் ஆளுகைக்குள் வரும் வரை எனக்கு மரணமில்லை. கருணை, தயை என்பதெல்லாம் எதற்கும் பிரயோஜனப்படாத வெற்று வேதாந்தங்கள். அதேபோல் எந்த சித்தாந்தமும் என்னைச் சிறைப்படுத்த நான் அனுமதித்ததில்லை.

வீரனாயிருந்தால் போதுமா வியூகம் வகுக்க தெரிந்திருக்க வேண்டாமா? யாருக்கும் மகுடம் தேடிவராது அதற்கு வாழ்க்கையை பணயம் வைக்க வேண்டும். மங்கோலிய பேரரசின் வேராக நான் இருக்கும்வரை யாராலும் வீழ்த்த முடியாது. சேனைகளை வழிநடத்தும் மன்னனின் வீரம் ஆயிரம் படைவீரர்களுக்கு ஒப்பானதாக இருக்க வேண்டும். எனது படைகளைக் கொண்டு எத்தனையோ ஆணவக்காரர்களின் கோட்டையை தகர்த்துள்ளேன். சூரியனாக இருக்க விருப்பப்படுபவன் தான் வானத்தை ஆட்சி செய்ய முடியும். சரணடைபவர்கள் பூமியில் வாழ்வதற்கு தகுதியற்றவர்கள் என்பதே என் கருத்து. நான் ஓங்கிய வாள் தலையைத் துண்டாக்காமல் இருந்ததில்லை. போர்க்களத்தில் மின்னலென பாய்ந்து எதிரிகளை பந்தாடுவது எனக்கு கைவந்தகலை.

போர்க்களத்தில் மரணமடைவது தான் வீரனுக்கு அழகு.

எனக்குப் பிறகு மங்கோலியப் பேரரசு எப்படி இருக்குமோ? எதிரிகளை எளிதாக கண்டுபிடித்துவிடலாம் ஆனால் துரோகிகளை கண்டறிய முடியாது. கல்யாண வீட்டில் மாப்பிள்ளையாகவும், இழவு வீட்டில் பிணமாகவும் இருக்க விரும்புவன் நான். என்னை நிகர்த்த வீரன் பிறக்கவுமில்லை பிறக்கப்போவதுமில்லை. வாழ்வின் முக்கால் பகுதியை போர்க்களத்தில் கழித்தவன் நான். எனது மங்கோலியப் பேரரசு உலகை கட்டி ஆளவேண்டும் அதுவரை எனக்கு ஓய்வு என்பதே கிடையாது. இப்போதெல்லாம் மனம் சொல்வதை உடல் கேட்க மறுக்கிறது. நேற்று வரை என்னால் முடியாதது ஒன்றுமில்லை என நம்பியிருந்தேன். அகண்ட மங்கோலியப் பேரரசுக்காக நான் செய்ததை எண்ணி வெட்கப்படும் சந்தர்ப்பம் வராது என்றே நினைக்கிறேன், காலில் குத்தியது சிறு முள்ளானாலும் உறுத்தத்தானே செய்யும். காதில் புகுந்த சிற்றெறும்பு யானையே சாகடித்துவிடும் அல்லவா?

பெற்றதுக்காகப் பெருமைப்படவும் இழந்ததற்காக வருத்தப்படவும் ஒன்றுமில்லை என இப்போது தோன்றுகிறது. பாரத்தை இறக்கி வைக்கும்போது இவனால் சுமக்க முடியுமா என யோசிக்க வேண்டியிருக்கிறது. ராஜ்ஜியத்தை கட்டமைப்பதைவிடவும் அதை அரசாட்சி செய்வது பெருங்கஷ்டம். விலைபோகக் கூடியவர்களிடம் நாம் எச்சரிக்கையாகத்தான் இருந்தாக வேண்டும். எனது சந்ததிகள் தங்கத்தால் இழைக்கப்பட்ட ஆடைகளைத்தான் உடுத்துவார்கள். அதிஅற்புதமான பதப்படுத்தப்பட்ட இறைச்சிகளையே உண்பார்கள். வைரக்கற்கள் பொதிக்கப்பட்ட ரதத்தில் பயணம் செய்வார்கள். சுவர்க்கத்தைவிடவும் வசதி படைத்த கோட்டைகளில் வசிப்பார்கள். இறைவனுக்கு நிகராக புலவர்களால் துதிக்கப்படுவார்கள். ஆனால் இதெற்கெல்லாம் மூலகாரணமான என்னை என் சந்ததிகள் சுலபமாக மறந்துவிடுவார்கள் தோலன் எனக்கூறி செங்கிஸ்கான் தன் கண்களை மூடினான். அவன் மரணத்தை எதிர்கொண்ட விதத்தினால் தான் வரலாறு செங்கிஸ்கானைப் பற்றி இன்றும் பேசுகிறது.



**ப.மதியழகன்,**
தமிழாசிரியர்,
தேசிய மேல்நிலைப் பள்ளி,
மன்னார்குடி.
கைப்பேசி:9597332952
பகிரி: 9384251845

# உயிர் எழுத்துக்களால் ஒரு அன்பு பரிசு

அன்பு என்னும் வலிமையான
ஆயுதமாய

ஆணி போல் என் நெஞ்சில் எப்போதும்
குடியிருக்கிறாய்

இலக்கணத்தில் வரும் இரட்டை கிளவி
போல் சேர்ந்தே இருப்பேன் என்றும்
உன்னுடன்!

ஈர்க்கின்றன உன்னுடைய அன்பு
நமக்குள் ஆயிரம் சண்டைகள்
ஏற்பட்டபோதிலும்

உன் உணர்வுகளை மதிக்க
ஆரம்பித்தேன் ஏனென்றால் சினம்
கொண்ட சொற்கள் யாருகாயினும்
வலிக்கும் என்று!!

ஊதிலிகளில் இருந்து வரும் இசை
போல ரசித்தேன் உன் ஆசை
கனவுகளை!!

எட்டாத துயரத்திலும் எட்டாத
இன்பத்திலும் என்றுமே இருப்பேன்
உன் உறுதுணையாக!

ஏணிகளில் உள்ள படி கட்டுகலை
போல் நான் இருப்பேன் வாழ்க்கையில்
என்றும் நீ வெற்றி வாகை சூடுவதற்கு!

இவகை நிலமும் அழகே அதுபோல
எக்காலத்திலும் இளமை முதல்
முதுமை வரை ரசிப்பேன் உன் அழகை
உன் அன்பை!!

ஒளி தரும் வெளிச்சம் போல் என்
வாழ்விற்கு என்றும் வெளிச்சமாய் நீ
திகழ்கின்றாய்!!

ஓடி கொண்டிருக்கும் நதி போல என்
அன்பானது என்றும்
ஓடிகொண்டிருக்கும் இறுதி வரை!!

ஔவையாரின் சொந்தம் ஆத்திச்சூடி
போல என் சொந்தம் நீதானே!!

ஃ என்ற அற்புதமான எழுத்தைப்
போல வாழ்க்கையை அற்புதமாக
வாழ்வோம்!

— அபிநயா,
சென்னை.

# வழக்கைத் திரும்பப் பெறுகிறேன்

உங்களின் திட்டப்படியே
வழக்கைத் திரும்பப்பெற
வந்திருக்கிறேன்.

நீங்கள் தயார் செய்து வைத்திருக்கும்
எல்லா கோப்புகளிலும்
ஒப்பம் வாங்கிக் கொள்ளுங்கள்.

உங்கள் அறிவுறுத்தலின்படியே
அந்த நல்லவர்கள்
என் கைவிரல்களைச்
சேதப்படுத்தாமல்தான்
விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

தகவல் அறிக்கையின்
அத்தனை குறிப்புகளையும்
அப்படியே நம்புகிறேன்
எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை.

அரண்டு போயிருக்கும்
இன்னொரு மகளுக்காகயாவது
வாழ்ந்து தொலைக்க வேண்டியுள்ளது.

உங்கள் நல்லெண்ணப்படியே
வழக்கைத் திரும்பப்பெறுகிறேன்.

— செவல்குளம் செல்வராசு

---




T சாலினி ஜெயங்கொண்டம்

## அப்பாவை
நினைவுபடுத்திக் கொண்டே
இருக்கிறது...
அவர் நட்டு வைத்த மரமொன்று,
காலமாகி பல காலமான பிறகும்!
----------

## இரவைப் பற்றிய
கவிதையொன்றை
எழுதிக்கொண்டிருக்கிறேன்,
எட்டிப் பார்க்கிறது... நிலவு!
----------

## சிறு
கல்லெறிந்ததும்,
சிதறிப் போகும்
பறவையாகிறது...
மென்மையான மனது!
----------

## வலியோடு
கடந்து போன பாதையை
திரும்பி பார்க்கிறேன்...
நீண்டு கொண்டே இருக்கிறது,
ஏமாற்றங்கள்!
----------

## மரம் பற்றிய
கவிதையொன்றை
எழுதிக் கொண்டிருக்கிறேன்,
சொல்ல முடியா துயரங்களை
சுமந்த படி பறந்து வருகிறது ...
கூடற்ற பறவையொன்று!
----------

அன்பும் அரவணைப்பும்
சுயநலமாய்
இருக்கும் தேசத்தில்
ஆதரவற்று கிடக்கிறது...
ஏழைகளின் உலகம்!
----------

## அம்மா பேசுவது இப்போதெல்லாம்
புரிவதில்லை ...
அன்பிற்கு மொழிபெயர்ப்பு
தேவையில்லை!
----------

## புத்தனின்
மௌனம் சம்மதம் அல்ல...
யசோதரைக்கு!
----------

## தன் வேதனைகளுக்கு
அழ நேரமில்லை...
என் வேதனைகளுக்கு அழும்,
அம்மாவுக்கு!
----------

## மிருகக்காட்சி சாலை
வெறும் சாலையானது...
புலியை பூனைக்குட்டி என
அழைக்கும் மகளுக்கு!



— மு.முபாரக்

# நீயற்ற இரவுகள்

காகிதமும் நானும்
பேச நினைக்கிறோம்
தனிமையின் புலம்பலை
உன்னோடான நினைவுகளை
நீ எனக்கென பேசிய வார்த்தைகள்
அந்த இரவோடு
நான் உனக்கென அழுத
நினைவுகளும்
அந்த இரவோடு
சிரிப்பினில் கொஞ்சம்
சிந்தனையில் கொஞ்சம் என
நம் கவலைகள் கொஞ்சம் - சில
சண்டைகளை என்
நெஞ்சம் நினைக்கவே - இன்று
நீயற்று தவிக்கும் இரவுகளாக!

# வாழ்க்கை

தேடல் யாவும்
தேடி செல்ல கைகிட்டும்
தேடல் பறவைகளாய்
தேடி தின்ற படி
தேடியே சென்ற படி
உலவும் வானமதில்
உல்லாசம் இன்பமதில்
உள்ளம் மட்டும்
உறைந்த படி திரும்ப செய்யும்
எந்தன் வீட்டின் வாசல் முன்னே!
சலித்த வாழ்க்கை பின்னே
சங்கடங்கள் கண்ட பின்னே
சரி எதுவென்று தெரிந்த பின்னே!
எமையும் என் இல்லம்
நாட செல்லும்
தூர தேசம் எதிலும் !

— கனிமொழி சீனிவாசன்

# தேடல்

ஒவ்வொரு மனிதனின்
தேடலும் காலத்துக்கு காலம் வித்தியாயப்படும்.

ஒரு மனிதனுக்கே
ஒரே தேடலுக்கான பதில்கூட காலத்துக்கு காலம் வித்தியாசப்படும்.

அண்மைக்கால என் தேடலும் நான் புரிந்துகொண்ட பதில்களையும் இன்று பதிவு செய்து வைக்க விரும்புகின்றேன்.

உயிர்:-

என் தந்தையால் உருவாக்கப்பட்டது என்ற முடிவுக்கு என்னால் வரமுடியவில்லை.

ஏனெனில் அவர் எப்படி உருவாக்கினார் என்ற கேள்விக்கு என்னக்கு இதுவரை விடை கிடைக்கவில்லை.

ஆகவே என் தந்தை மூலம் உருவானேன் என்ற முடிவுக்கே வரமுடிகின்றது.

என் தாயின் துனையோடு அவள் கருப்பையில் உருமாறி இப்பூமியை தொட்டேன்.

என்னோடு உருவான பல லட்சம் சகோதர சகோதரிகள் அன்று என் தாயின் கருப்பையில் இடம்பிடிக்க முடியாத்தால் அன்றே இறந்துவிட்டார்கள்.

என்தந்தையிடம் நான் உருவாகும் போதும் அவரின் பல தலைமுறை ஞாபகங்களையும் தாங்கியே உருவேன்.

என்தாயிடம் சென்று உருமாற்றம் அடைந்தபோது அவளின் பல தலைமுறை ஞாபகங்களையும் இணைத்துக்கொண்டே உருமாறினேன்.

அந்த உயிர் எனது உடலில் எப்பாகத்தில் இருக்கின்றது என்ற கேள்விக்கு எனது உடலில் எல்லா இடங்களிலும் இருக்கின்றது என்பதே பதிலாக அமைகின்றது.

இந்த முடிவுக்கு வருவதற்க்கு கீழ் உள்ள வரிகள் துணை செய்கின்றன.

மூக்கை பார்
கண்ணை பார்
காலைப்பார்
காதைப்பார்
அவரைப்போல இவரைப்போல என்று அவர்களுக்கு தெரிந்த தந்தைவழி தாய்வழி பரம்பரையை நினைவுக்கு கொண்டு வருவார்கள்.

தந்தையிடம் இருந்து உயிர் தாங்கிவந்த ஞாபகங்கள் எம் அங்கங்கள் அனைத்திலும் இருப்பதால் உயிர் உடலின் எல்லா பாகத்திலும் இருக்கிறது என்ற முடிவுக்கு வரல்லாம்.

மேலும், இன்று உலகில் அறியப்பட்டு பெருகிவரும் "குலோனிங் முறை" விஞ்ஞான அறிவியலும் எமது ஒவ்வொரு செல்லிலும் உயிர் இருப்பதை நன்கு உறுதி செய்கின்றது.

இந்த பாதையில் இருந்து உன்வாழ்வியலுக்கு நீ எடுத்துக்கொள்ளும் பாடம்.

பல தலமுறையினரின் அனுபவங்கள் உன் ஞாபகத்தில் இருந்து உனக்கு வழிகாட்டுகின்றது.

உன் தந்தையிடம் இருந்து புறப்பட்ட பல லட்சம் சகோதர சகோதரிகள் உன் தாயின் கருப்பையிலே இடம்பிடிக்க முடியாது இறப்பதை உடன் இருந்து அறிந்ததால்

உன்வாழ்வில் எத்தனை இழப்புக்களையும் தாங்கி வாழும் தன்னப்பிக்கை உன்னிடம் ஏற்கனவே உண்டு.

பல லட்சம் சகோதர சகோதரிகளை முந்தி தாயின் கருப்பையில் இடம்பிடித்த தையிரியமும் புத்திசாலித்தனமும் உன்னிடம் இயல்பாகவே உண்டு.

எனவே
உன்னால் முடியும்.
உன்னால் முடியும்.
உன்னால் முடியும்.

நன்றி.

— ரதி,
பிரான்சு

## முன்பணிகாலம்...

இளங்காலை பொழுது...

பசுமை சூழ்ந்த கழனியது
வென்போர்வைதனை போர்த்தி
தூக்கம் களையா பொழுது...

சிட்டு குருவிகள் ரீங்காரம் இட..
அதற்கு ஏற்பார் போல்
தூக்கனாங்கூடுகள் நடனமாட..

வெங்கழல் தான் தரையிறங்கி வந்தார்
போல் எங்கு பார்த்தாலும் திசை
தெரியா மூட்டம்...

சிறு சிறு புற்கதிரும் வாஞ்சையாய்
மகுடம் தரிக்க, பூக்கள் அது
மௌனமானது ஏணோ...

நிசப்தம் மரம், செடி, கொடிகளுக்கு
மத்தியில்...
ஏதோ ஒரு இனம் புரியா உணர்வு
என்னுள்...

ஒற்றையடி வரப்பில் ஒற்றை ஆளாய்
நான்...

மாற்றம்... ஆம்... நிசப்தம் அது
நொடிப்பொழுதில் அடைந்தது
மாற்றம்..

இனம் புரியா பாஷை தனில் மரம் ...
செடி, கொடிகளுடன் பேச... குளிர்ந்த
தென்றல் அது நொடி பொழுதில்
ஊடுருவியது....

இமைக்கும் தருணத்தில் என் மேனிபடர
இமை அசையாது ரசித்து இருந்தேன்
புத்துணர்ச்சியை....

கண்களில் குளிர்ச்சி பொங்க
தென்றளது நிறைத்தது ஏனோ என்
மனதை...

இரு மலைகளின் முகடுகளில் பொன்
கீற்றுகள் வெளியேற.. நரையான்,
சிட்டு, குயில், கல்குழவி..
அக்கள்குருவிகள் இராகம்
இசைத்தபடி வாணில் மிளிர்ந்தது.....

நொடிப்பொழுதில் வானில் அந்த
பொன் கீற்றுகளுடன் பொன் பிழம்பு
வெளியேற .... வென்போர்வை பூண்ட
கழனி யது பொண்ணிரமாய்
ஏகாந்ததுடன் நித்திரை களைத்தது....

வாஞ்சயாய் மகுடம் தரித்த
புற்கதிற்களோ பொன்னிற மணிகள்
தரித்த ராஜ தோரணையில் விடைத்து
நிற்கின்றது...

புறம் எங்கும் மூண்ட மூட்டம் அது
மெல்ல தெளிந்து நாற்புறதையும் என்
விழிக்கு காட்டியது...

மீண்டும் சிட்டுக்குருவி ரீங்காரம் இட
இப்போது ஆடியது என்னவோ என்
கால்கள்....

இயற்கை அன்னையின் மடிதனில்
விழுந்து மீள முடியாமல் சிலிர்த்து
போனேன்......
சிந்தனை இல்லாமல்...

— விருதை சதீஷ்

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
டணாணாணீ://ட்ச்டிணணாடச்ணூடுச்டூ.ட்ச்ணணச்டி.டிண

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில்).

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு.

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்.

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது.

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு.

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்.

சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்

பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்.

நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி.

குழாய் பதிக்கும் பணி.

விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு.

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு.

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

+91 8220567322

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal

ThiravukolMagazine